வாக்கியங்களை நிரல்படுத்தி கதையை உருவாக்குக.

1

2

3

4

5

6

7

சமையலறையில் இருந்து அனைவருக்கும் குளிர்பானம் எடுத்து வந்த அமுதனின் அம்மா தொலைபேசி அலறியதும் அதை எடுத்தார். அனைவரும் களைப்பில் குளிர்பானத்தை ருசித்து குடித்துக் கொண்டிருந்தனர்.அப்போது " ஆ...என்ன?" என்ற அம்மாவின் அதிர்ந்த குரலைக் கேட்டு அனைவரும் திடுக்கிட்டனர்.அம்மாவின் முகம் வாடிய மலரைப் போல் ஆனது

சற்று நொடியில் அமுதனின் நண்பன் கபிலன் வந்து " அமுதன் உன் வீட்டுக்கு வரவேண்டிய முறுக்கு என் வீட்டுல முகவரி மாற்றி கொடுத்துடாங்க,உங்க அம்மா பேரு தனம் தானே? இந்தா எங்க அம்மா கொடுக்க சொன்னாங்க" என்று கூறும் போதே அம்மாவின் முகத்தில் தீப ஒளியின் வெளிச்சம் தோன்றியது

"பண்டிகை நாளில் நம் வீடு அழகாக இருக்கும்.வீட்டிற்கு வருபவர்கள் நம்மைப் பாராட்டுவார்கள்"என்ற கயல்விழி தன் மனதிற்குள் நினைத்து மகிழ்ந்தாள்.அமுதனும் தனக்குக் கொடுத்த வேலையைக் கவனத்துடன் செய்து கொண்டிருந்தான்

தீபாவளிப் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வருடமும் அப்பண்டிகையைக் கொண்டாட ஆயத்த வேலைகளைச் செய்வது வழக்கம்.இவ்வாண்டும் அமுதனின் அம்மா அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளைப் பகிர்ந்து கொடுத்தார். இதற்கு அவனுடைய அப்பா திரு . நாதனும் விதிவிலக்கல்ல.அனைவரும் முகமெல்லாம் பல்லாக தங்களின் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

"இந்த வேலைகளைச் செய்வதில் மனம் மகிழ்ச்சியாக இருக்கிறதே"என்று தன் மனதில் நினைத்தபடி கோகுலனும் திரைச்சீலைகளை மாட்டினான். அன்று வீடே மகிழ்ச்சியில் மூழ்கியது.

அனைவரும் அம்மாவின் அருகில் சென்றனர்.அம்மா தலையில் கைவைத்தப்படி மறுமுனையில் பேசுவதைக் கேட்டு கொண்டிருந்தார்.அப்பா கேட்டதற்கும் அம்மா கையை மட்டுமே அசைத்தார்.சற்று நேரம் எல்லா வேலைகளும் அப்படியே நின்று போனது.எல்லோருடைய முகத்திலும் கலவரம். தொலைப்பேசியை வைத்த அம்மா அப்பாவைப் பார்த்தார்.

நாம் ஆர்டர் பண்ணிய மூன்று டின் முறுக்கு தவறுதலா இந்த 'பிளாட்டுல சி புளோக்குல' யார் வீட்டுக்கோ போய்விட்டது.இப்ப நான் என்ன பண்ணுவது" என்று அம்மா கேட்டதும் அமுதனின் அப்பா வேகமாக சிரித்தே விட்டார்.

LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS